Date : 09.06.2025

SC.No. : 192/2024

PW : 1

Name : **துரைப்பாண்டி த.பெ.ஆறுமுகம்**

சாட்சி மீண்டும் மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

இந்த வழக்கின் அ.சா.2 இந்து மதி என் மனைவி. அ.சா.3 அமுதா எனது அக்கா. அ.சா.4 கிருஷ்ணன் எனது மைத்துனர். அ.சா.5 மீனாள் எனது பெரியம்மா . அ.சா.6 மணிமேகலை எனது அண்ணன் மனைவி. சாட்சி பஞ்சவர்ணம் எனது பெரியப்பா அவர் தற்போது இறந்துவிட்டார். அ.சா.7 கருப்பையா எனது அண்ணன், அ.சா.8 எனது அண்ணன். 1 வது எதிரி தலையாரியாக வேலை பார்க்கிறார். நான் மரவியாபாரம் தொழில் செய்து வருகிறேன். மரவியாபார வேலை செய்து வருவதை நான் புகாரிலோ போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை. 1 வது எதிரி தலையாரி வேலை பார்ப்பதால் காலையில் வேலைக்கு சென்றுவிட்டு மாலையில் வருவார் என்றால் சரிதான். நான் மரம்வெட்டியது சம்மந்தமாக அரசாங்கத்திற்கு ரூ.31,810/- தொகை செலுத்த வேண்டியிருந்தது என்றால் சரிதான். அந்த தொகையை நான் நெடுநாளாக செலுத்தாதால் 13.08.2021 ம் தேதி வட்டாச்சியர், மண்டல துணை வட்டாச்சியர், கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் அன்று மதிய நேரம் வந்தார்களா என்றால் வந்தார்கள். அவர்கள் வந்த ஜீப்பை எதிரியின் வீட்டிக்கருகில் நிறுத்தி எனது வீடு எங்கிருக்கிறது என விசாரித்தார்கள் என்னை விசாரிக்கும்போது 10 நிமிடம் கழித்து 1 வது எதிரி அங்கு வந்தார். அங்கு வந்து அவரின் மேலதிகாரிகளுக்கு வணக்கம் சொல்லிவிட்டு அங்கு நின்றார். 1 வது எதிரியை பார்த்து நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள் நீங்கள் சென்றுவிடுங்கள் என்று சொல்லி போகச்சொன்னேன். ஆனால் அவர் போகாமல் அங்கு நின்றிருந்தார். இவ்வழக்கிற்கு முன்பாக 1 வது எதிரியின் மனைவி இறந்துவிட்டார். அவருடைய இறப்பிற்கு காரணம் என கூறி என் மீதும் என் தாயார் புஷ்பம் மற்றும் எனது அப்பா ஆறுமுகம் மீதும்

வழக்கு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் இறந்த 1ம் எதிரியின் மனைவி அவரது மரண வாக்குமூலத்தில் அவரது சாவிற்கு காரணம் நான்தான் என கூறிய விபரம் எனக்கு தெரியாது. அந்த வழக்கு தேவகோட்டை நீதிமன்றத்தில் நடந்தது. அந்த வழக்கில் எனது உறவினர்கள் சமரசம் செய்து அந்த வழக்கு முடிந்துவிட்டது. எங்கள் ஊரில் மொத்தம் 5 வீடுகள் உள்ளது அதில் எதிரியின் வீடும் ஒன்று. மற்ற 4 வீட்டுக்காரர்கள் 1ம் எதிரியுடன் பேசிக்கொள்வார்கள் என்றால் சரியல்ல. அமுதா, கிருஷ்ணன் என்பவரோடு பேசிக்கொள்வார் எங்களோடும், எங்க சித்தப்பா, பெரியப்பாவோடும் பேசமாட்டார்கள். சுமார் 2009-ம் ஆண்டிலிருந்து நாங்கள் பேசிக்கொள்வதில்லை. எதிரியின் மனைவி இறந்தபிறகு அவர் குழந்தைகளை வளர்த்து திருமணம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் எதிரி மரவியாபாரம் செய்வதில்லை என்றால் சரிதான். அதனால் எனக்கும் அவருக்கும் தொழில் சம்மந்தமாக எந்த போட்டியும் இல்லை என்றால் சரிதான். அன்றைய தினம் நடந்த சம்பவத்திற்கு நான் புகார் ஏதும் அன்று கொடுக்கவில்லை. பின்பு சம்பவத்திற்கு மறு நாள் காலையில் கொடுத்தேன் நேரம் தெரியவில்லை. சிவகங்கை அரசு மருத்துவமனையில் வைத்து புகார் கொடுத்தேன். சார்பு ஆய்வாளர் என்னிடம் என்ன நடந்தது என்று கேட்க கேட்க நான் நடந்த விபரம் சொன்னேன். எனது மனைவி மருத்துவமனையில் இருந்தார் அவரிடம் விசாரித்து கையொப்பம் எதுவும் பெறவில்லை என்னிடம் மட்டும் விசாரித்து கையொப்பம் பெற்றுக்கொண்டனர். அந்த புகாரில் எனது அம்மா புஷ்பம் சாட்சி கையொப்பம் செய்தார். எனது அம்மாவை போலிசார் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன் அதனால் எனக்கு எழுத படிக்க தெரியும். சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து 3 கி.மீ துாரத்தில் தான் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.1 புகாரில் உள்ள எழுத்தை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது தற்போது அதிகாரிகள் எழுதினார்கள் என்று சாட்சி மீண்டும் கூறுகிறார். சம்மனில் உள்ள கையெழுத்தும் புகாரில் உள்ள கையெழுத்திற்கும் மாற்றம் உள்ளது என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.1 புகார் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் என்னால் கொடுக்கப்படவில்லை என்றும் அது வழக்கிற்கு ஏதுவாக பின்னீடு தயார்

செய்யப்பட்டது என்றும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல என்று சொன்னால் சரியல்ல. அ.த.சா.ஆ.1 புகாரில் எனக்கும் ஆஜர் எதிரிக்கும் தொழில் சம்மந்தமாக பிரச்சினை இருந்து வந்தது என்று சொல்லவில்லை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். 13.08.2021ம் தேதி என் மீது 1ம் எதிரி திருவேகம்பத்தூர் காவல்நிலையத்தில் என் மீது புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. 1ம் எதிரி மறு நாள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விபரம் எனக்கு தெரியும். என் வீட்டில் 3 வயது பெண் குழந்தை இருந்தது. அவர் தற்போது 4 ம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கிறார். என் மனைவிக்கு காயம் ஏற்பட்ட பிறகு தான் எனக்கு காயம் ஏற்பட்டது. என் மனைவிக்கு காயம் காரணமாக ரத்தம் வந்தது. அவர் உடுத்தியிருந்த ஆடை நைட்டியில் ரத்தம் படிந்திருந்தது. ரத்தம் என் வீட்டு வாசல்படியில் சிந்தியிருந்தது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு ரத்தம் வந்தது. அந்த ரத்தம் நான் அணிந்திருந்த பனியனில் படிந்திருந்தது. எனக்கு ஏற்பட்ட காயத்திலிருந்து வந்த ரத்தமும் என் வீட்டு வாசல்படியில் தான் படிந்திருந்தது. எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தன்று வேலை முடித்து வந்த 1வது எதிரியிடம் மாலை நேரத்தில் நான் மது அருந்திவிட்டு நீதாண்டா உன் அதிகாரிகளிடம் என்னை பற்றி கூறுகிறாய் நீ உயிரோடு இருக்கக்கூடாது என்று சண்டை போட்டேன் என்றால் சரியல்ல. அதன்பின்பு அங்கிருந்தவர்கள் விலக்கிவிட நான் என் வீட்டிற்கு போனேன் என்றால் சரியல்ல. அப்படி போகும்போது மது போதையில் நான் அருவாளை எடுத்துக் கொண்டு 1ம் எதிரியை தாக்க முயற்சித்த போது என் மனைவி என்னிடமிருந்த அருவாளை பறித்தபோது அவருக்கும் எனக்கும் காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது என்றால் சரியல்ல என்ற உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் அ.சா.பொ.1 அருவாள் 1ம் எதிரிக்கு சொந்தமானது அல்ல என்றும் அது என் வீட்டிலிருந்த எனக்கு சொந்தமான அருவாள் என்றால் சரியல்ல. நான் முதலில் வாய்தகராறு செய்ததால் அவர் கொடுத்த புகாரை மறைப்பதற்காக நான் இந்த பொய்யான புகாரை கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் 1வது எதிரிக்கும் ஏற்கனவே உள்ள முன் விரோதம்

காரணமாக அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள மரங்களை வெட்டி நான் சுயலாபம் பெற்று வருகிறேன் என்றும் அதனால் அந்த பகுதியில் உள்ள காவல்நிலையத்தில் நான் செல்வாக்கு நிறைந்த நபராக இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் புறம்போக்கு நிலத்தில் மரம் வெட்டி கடத்துவதால் அதற்கு 1ம் எதிரி இடையூறாக இருக்கிறார் என்று எண்ணி அவரை அந்த ஊரை விட்டு விரட்டவேண்டும் என்று நானும் என் உறவினர்களும் நீண்ட நாட்களாக திட்மிட்டு கொண்டிருக்கிறோம் என்றால் சரியல்ல. எதிரிகளும் என்னை அசிங்கமாக பேசவும் இல்லை என்றும் எனக்கும் என் மனைவிக்கும் காயங்கள் ஏற்படுத்தவில்லை என்றும் என்னை மிரட்டவில்லை என்றும் வழக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.06.09 15:34:03 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.